**CC.No.193/2023 (JM.No.II, DHARMAPURI.)**

**29.05.2025**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டது. (எதிரிகள் ஆஜர் )**

**PW1 : திரு.மணி த/பெ. அருணாசலம்**

**முதல் விசாரணை**

நான் புறவடை பேட்டையான் கொட்டாயில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது. கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மதியம் சுமார் 12 மணிக்கு முருகன் என்பவரிடம் சுமார் 25 செனட் நிலத்தை நான் வாங்கினேன். எதிரிக்கும் முருகன் என்பவருக்கும் ஏற்கனவே முன் விரோதம் இருந்தது. அது தெரியாமல் நான் 25 செனட் நிலத்தை முருகனிடம் இருந்து வாங்கி விட்டேன். அப்போது நான் வாங்கிய நிலத்தை பார்க்க சென்றபோது என்னுடைய பங்காளியின் நிலத்தை எதற்கு வாங்கினாய் என்று என்னை பார்த்து தகாத வார்த்தையினால் திட்டி ஒரு குண்டு கல்லால் தலை மீது வீசினார். அப்போது நான் தடுத்தபோது எனது வலது கையின் பெருவிரலுக்கு கீழ் எலும்பு முறிவு ஏற்பட்டது. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கல்லால் தான் என்னை அடித்தார். காயம்பட்ட என்னை என்னுடைய மனைவி அம்பிகா தர்மபுரி அரசு மருத்துவமனைக்கு சென்று சேர்த்தார். அங்கு முடியாது என்று சொன்னதன் பேரில் தனியார் மருத்துவமனையான டி என் வி மருத்துவமனைக்கு சென்று சேர்த்தனர். இது சம்பந்தமாக காவல்துறையினர் என்னை விசாரித்தனர். **இந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கருங்கல் சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணையில் கூறியது போல தான் போலீஸ் விசாரணையிலும் கூறினேன் என்றால் சரிதான். காளியப்பன் என்பவர் என்னுடைய தம்பியின் மாமானார் ஆவார். காளியப்பன் என்பவர் புரவடையில் குடியிருந்து வருகிறார். காளியப்பன் வீட்டிற்கும் ஆஜர் எதிரியின் வீட்டிற்கும் ஒரு கிலோமீட்டர் தூரம் இருக்கும். என் வீட்டிற்கும் காளியப்பன் வீட்டிற்கும் சுமார் முக்கால் கிலோ மீட்டர் இருக்கும். காளியப்பன் வீட்டிற்கும் சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் சுமார் முக்கால் கிலோமீட்டர் இருக்கும். காளியப்பனிற்கு எழுத படிக்க தெரியாது. நான் ஐந்தாம் வகுப்பு வரைக்கும் படித்துள்ளேன். எனக்கு எழுத படிக்க தெரியாது. என் வீட்டிற்கும் என் மனைவி வீட்டிற்கும் சுமார் மூன்று கிலோ மீட்டர் தூரம் இருக்கும். என் மனைவி +2 வரை படித்துள்ளார். மாணிக்கம் என்பவர் புறவடை என்னும் ஊரை சார்ந்தவர். முருகன் என்பவர் என் உறவினர் அல்ல. எங்கள் ஊர் காரர் ஆவார். கந்தசாமி என்பவர் என்னுடன் பிறந்த தம்பி ஆவார். கந்தசாமியின் மாமனார் தான் காளியப்பன் ஆவார். ரத்தினவேல் என்பவர் என்னுடைய முதல் தம்பி ஆவார். கந்தசாமி என்பவர் என்னுடைய இரண்டாவது தம்பி ஆவார். நான் மூன்று டிராக்டர் வண்டிகளை வைத்து தொழில் செய்து வருகிறேன். வண்டிகளின் உரிமையாளரும் நான் தான். மற்ற நிலங்களுக்கும் ஏறு ஓட்டுவதற்காக வண்டிகளை விடுவேன். டிராக்டர் மூலமாக

தண்ணீர் விற்பனை செய்வேன் என்றால் சரிதான். எனக்கு உறுதுணையாக என்னுடைய தம்பி கந்தசாமி என்பவர் டிராக்டர் ஓட்டி தொழில் செய்ய உதவி செய்வார். மூன்று டிராக்டர்களும் வெள்ளை போர்டில் தான் பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய டிராக்டரின் பதிவு எண். TN 29 BJ 5695. என்னுடைய அனைத்து டிராக்டர்களும் தர்மபுரியில் பதிவெண் கொண்டதா என்றால் இரண்டு டிராக்டர்கள் மட்டும் தர்மபுரி பதிவெண் கொண்டது ஒன்று மட்டும் TN 32 பதிவெண் கொண்டது. அனைத்து டிராக்டர்களும் சொந்த உபயோகத்திற்கு தான் பயன்படுத்த வேண்டும் என்று மோட்டார் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். டிராக்டர்களை வேறு நிலத்தில் ஓட்டுவதற்காகவோ தண்ணீர் விற்பனை செய்வதற்காகவோ முன் அனுமதி வாங்கவில்லை என்றால் சரிதான். நான் எந்த கட்சியிலும் இல்லை. திமுக ஒன்றிய செயலாளர் ஏ. சண்முகம் என்பவர் என்னுடைய நண்பர் ஆவார். முன்னாள் அதிமுக ஒன்றிய செயலாளர் அரங்கநாதன் என்பவர் என்னுடைய ஊர் காரர் என்றால் சரிதான். என்னுடைய தாத்தா குமரன் என்பவரால் தற்போதைய விவசாய நிலம் வாங்கப்பட்டது. விவசாய நிலம் மொத்தமாக சுமார் 10 ஏக்கர் எங்களிடம் உள்ளது. எங்களது பூர்வீகம் கோர புளியான்கொட்டாய் என்றால் சரியல்ல. அதியமான் கோட்டையில் இருந்து ஆத்துக்கொட்டாய் செல்லும் கிழக்கு மேற்காண சாலை எங்களுடைய நிலத்திற்கு அருகில் இல்லை என்றால் சரிதான். அதியமான் கோட்டையில் இருந்து ஆத்துக்கொட்டை செல்லும் சாலை வடக்கு புறமும் தென்புறமும் அருந்ததியர்களுக்கு அரசாங்கத்தால் இலவசமாக கொடுக்கப்பட்ட நிலம் என்றால் சரிதான். எங்கள் நிலத்திலிருந்து அருந்ததியர்களுக்காக கொடுக்கப்பட்ட நிலத்தை தாண்டி தான் சாலைக்கு செல்ல முடியும் என்றால் சரிதான். எதிரி மற்றும் அவருடைய பங்காளிகள் சாலைக்கு செல்வதற்காக அருந்ததியர்கள் நிலத்தில் அருந்ததியர்களின் அனுமதியோடு இரு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனம் செல்வதற்காக மண் சாலை அமைத்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி சாலை அமைப்பதற்காக என்னுடைய டிராக்டரில் தண்ணீரோ அல்லது மண் எடுத்துச் செல்லவோ நான் அனுமதிக்கவில்லை என்றால் சரிதான். நான் முருகனிடம் நிலம் வாங்கியதற்கான சர்வே நம்பர் எனக்கு ஞாபகம் இல்லை. முருகனிடம் இருந்து வாங்கியதாக சொல்லப்படும் நிலத்திற்கும் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் இடையே சுமார் 150 அடி இருக்கும் என்றால் சரிதான். எதிரி மற்றும் அவருடைய பங்காளிகள் அமைக்கப்பட்ட மண் சாலையை அருந்ததியர்கள் தடுத்தால் எதிரி அவரது வீட்டிற்கு செல்ல முடியாது என்றால் சரிதான். அந்த சாலையில் யார் செல்ல வேண்டும் என்று முடிவு செய்வது நிலத்தின் உரிமையாளரான பெருமாள் ஆசிரியர் தான் என்றாலும் எதிரி இல்லை என்றாலும் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் ஒரு வேப்பமரம் இருந்தது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் இரண்டு டார்ச் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் கிணறு உள்ளது என்றால் சரிதான். இருநூறு மீட்டர் தொலைவில் உள்ளது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயம் எதிரி வேப்பமரத்திற்கு அருகில் அமர்ந்து மேற்கு நோக்கியவாறு புல்லை அருவாளால் அறுத்துக் கொண்டு இருந்தார் என்றால் சரிதான். நான் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி எதிரி நிலத்திற்கு வந்தேன் என்றால் சரியல்ல அவருடைய பங்காளியின் நிலத்தில் தான் வந்தேன். எதிரி புல் அறுக்கும்போது நான் எதிரி நிலத்திற்குள் நுழைந்து எதிரியை பார்த்து கெட்ட வார்த்தைகளால் திட்டினேன் என்றால் சரியல்ல. எதிரி புல் அறுக்கும்போது நான் அவரிடம் இருந்து அருவாளை பிடுங்கினேன் என்றால் நான் அந்த இடத்திற்கு செல்லவில்லை. நான் எதிரியிடம்

அருவாளை பிடுங்கி அவரை அடித்த போது நான் கீழே தடுக்கி விழுந்து எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் எதிரியின் நிலத்தை விலைக்கு கேட்டேன் என்றாலும் அதை அவர் கொடுக்க மறுத்தார் என்றாலும் அவர் மீது முன் விரதம் கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. என் உறவினர்கள் காவல்துறையில் உள்ளனர் என்றால் சரிதான். எதிரியை நான் தாக்கியதால் அவருக்கும் காயம் ஏற்பட்டு அவர் அரசு மருத்துவமனையில் சேர்ந்தார் என்றால் சரியல்ல. எதிரி மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி 20 அடி தூரத்தில் இருந்து கல் வீசினார். மேற்கண்ட தகவலை புகாரில் நான் கூறவில்லை என்றால் சரிதான். எந்த வகையான கல் என்று நான் புகாரியில் கூறவில்லை என்றால் சரிதான். காயம் பட்டவுடன் என்னை மருத்துவமனைக்கு என் மனைவி அம்பிகா மற்றும் காளியப்பன் அழைத்து சென்றனர். என்னை மருத்துவமனையில் போலீசார் விசாரிக்கவில்லை. நான் இருசக்கர வாகனத்தில் மட்டுமே சென்றேன். காளியப்பன் என்னை மருத்துவமனைக்கு அழைத்து சென்றார் என்று நான் போலீஸ் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். புகாரியில் உள்ள கையெழுத்து மட்டும் தான் என்னுடையது. என் சித்தி மகன் போலீஸ்காரர் காமராஜ் புகாரை சொல்ல என் மனைவி புகார் எழுதினார். புகாரானது காவல் நிலையத்தில் வைத்து எழுதப்பட்டது. புகாரை என் உறவினர் காமராஜ் தான் எழுதினார் என்று நான் போலீசார் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தை நான் போலீசாரிடம் அடையாளம் காட்டவில்லை என்றால் சரிதான். என் தம்பி தான் அடையாளம் காட்டினார். சம்பவ இடத்தை என் தம்பிகளுக்கு நான் அடையாளம் காட்டவில்லை என்றால் சரிதான். எதிரி வீசிய கல்லை என் தம்பிகளுக்கு நான் அடையாளம் காட்டவில்லை என்றால் சரிதான். நான் தற்போது கூறியது தான் போலீஸ் விசாரணையிலும் கூறினேன். எதிரி அவர் நிலத்தில் அருவாளாலால் புல் அறுத்துக் கொண்டிருந்தார் என்றாலும் நான் தான் அவருடைய நிலத்தில் சென்று அவரை ஆபாச வார்த்தைகளால் திட்டி கையாளும் கல்லாலும் மாறி மாறி அடித்து அவர் கையில் இருந்த அருவாளை பிடுங்கும் போது ஏற்பட்ட காயத்தையும் ஓடும்போது கீழே விழுந்து ஏற்பட்ட காயத்தையும் எதிரில் ஏற்படுத்தியதாக பொய்யாக புகார் அளித்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் சிந்தியதாக கூறப்படும் ரத்தத்தை நான் போலீசார் விசாரணையில் கொடுக்கவில்லை என்றால் சரிதான். சான்று பொருள் 1 –ல் ரத்தக்கரை எதுவும் இல்லையென்றால் சரிதான். நான் புகாரில் கூறியது போல எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரியை பழிவாங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு கொடுக்கப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல. எதிரி என் மீது புகார் கொடுத்துவிடுவார் என்று பயத்தில் நான் பொய்யாக எதிரி மீது புகார் கொடுத்துள்ளேன் என்று சரியல்ல.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

**(அரசு தரப்பு சாட்சியை பிறழ் சாட்சியாக்கி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது)**

06.05.2023 அன்று 00.30 மணிக்கு வழக்கின் சம்பவயிடமா பாலாஜி மெடிக்கல் அருகே காவல் துறையினர் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்ததாகவும், அந்த பார்வை மகஜரில் கையெழுத்திட்டுவிட்டு அந்த

பார்வை மகஜரில் என்ன எழுதியிருந்தது தெரியாது என்று தற்போது ஆஜர் எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/–இரா.சுஷ்மிதா,
நீதித்துறை நடுவர் எண்.2
தருமபுரி.

**CC.No.193/2023 (JM.No.II, DHARMAPURI.)**

**29.05.2025**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டது. (எதிரிகள் ஆஜர் )**

**PW2 : திருமதி.அம்பிகா க/பெ. மணி**

**முதல் விசாரணை**

நான் அதியமான் கோட்டையில் குடியிருந்து குழி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அசா. 1 என்னுடைய கணவர் ஆவார். கடந்த மூன்று வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மதியம் என்னுடைய கணவர் நிலத்திற்கு சென்ற போது எதிரியின் பங்காளி வீட்டார் நிலத்தை நாங்கள் வாங்கியது சம்பந்தமாக நிலத்திற்கு சென்று வந்ததற்காக என்னுடைய கணவரை பார்த்து எதிரி கெட்ட வார்த்தையால் (கண்டார ஒலி பையனே, தேவடியா பையனே) திட்டினார். கல்லை தூக்கி எனது கணவர் மீது வீசினார். அதை தடுத்தபோது கையில் அடிபட்டது. நானும் வேறு ஒரு நபரும் என்னுடைய கணவரை இருசக்கர வாகனத்தில் உட்கார வைத்துக் கொண்டு தர்மபுரி அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். அங்கு நன்றாக சிகிச்சை செய்யாததால் மேல் சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனை டிஎன்வி எனும் மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு வைத்து என்னுடைய கணவருக்கு கையில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. அங்கு சிகிச்சையில் மூன்று நாட்கள் இருந்தோம். பின்பு அதியமான் கோட்டை காவல் நிலையத்தில் இது சம்பந்தமாக புகார் அளித்தோம். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணையில் கூறியது போல தான் போலீசார் விசாரணையிலும் கூறினேன் என்றால் சரிதான். எதிரியுடைய பங்காளியான முருகனிடம் தான் நாங்கள் நிலம் வாங்கினோம் என்றால் சரிதான். எதிரியின் நிலத்திற்கும் எங்கள் வீட்டிற்கும் சுமார் 1/2 கிலோமீட்டர் தூரம் இருக்கும். நாங்கள் முருகனிடம் வாங்கி நிறத்திற்கும் எதிரியின் வீட்டிற்கும் இடையே சுமார் அரை கிலோமீட்டர் தூரம் இருக்கும். நாங்கள் வாங்கிய நிலத்தின் சர்வே நம்பர் முதலியவற்றை எனக்கு ஞாபகம் இல்லை. அதியமான் கோட்டையில் இருந்து ஆத்துக்கொட்டாய் நோக்கி கிழக்கு மேற்காக செல்லும் சாலைக்கு எங்கள் நிலத்திலிருந்து மற்றொரு நிலத்தை தாண்டி தான் செல்ல வேண்டும் என்றால் சரிதான். எதிரி அவருடைய வீட்டிற்கு செல்லும் சாலையை பெருமாளிடம் சம்மதம் பெற்று தான் சாலை அமைத்தார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எதிரி அவருடைய நிலத்தில் அருவாளால் புல் அறுத்துக் கொண்டிருக்கும் போது தான் பிரச்சனை எற்பட்ட விவரத்தை என் கணவர் கூறி நான் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். எதிரி எந்த திசையில் இருந்தால் மற்றும் என் கணவர் எந்த திசையில் இருந்தார் என்ற விவரம் நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். எதிரி நிலத்தை எனது கணவர் விலைக்கு கேட்டார் என்றாலும் அதை எதிரி கொடுக்காமல் மறுத்ததால் முன்விரதம் காரணமாக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றாலும் ஆபாச வார்த்தைகளை காதால் கேட்கவில்லை என்றாலும் சரிதான். சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்தில் சுமார் 20 லிருந்து 30 பேர் இருந்தனர். எனது கணவர் எதிரி வைத்திருந்த அருவாளை பிடுங்கும் போது அதனால் ஏற்பட்ட காயத்தை

வைத்தும் தடுக்கி விழுந்த போது ஏற்பட்ட காயத்தை வைத்தும் பொய் புகார் அளித்துள்ளோம் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்தை நான் போலீசாரிடம் அடையாளம் காட்டவில்லை என்றால் சரிதான். என் கணவரை தாக்கியதாக சொல்லப்படும் கல்லை நான் போலீசாரிடம் அடையாளம் காட்டவில்லை என்றால் சரிதான். என் கணவருக்கு இரத்தம் வந்து காயம் ஏற்பட்டு தான் எலும்பு முறிவு ஏற்பட்டது என்றால் சரிதான். இரத்தம் சிந்திய மண்ணை போலீசாரிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். புகாரை நான் எழுதவில்லை என்றால் சரியல்ல. புகாரை யார் சொல்லியும் எழுதவில்லை. எங்களுக்கு நடந்ததை வைத்து நாங்களே எழுதினோம். புகாரில் எதிரி மற்றும் என் கணவர் எந்த திசையில் இருந்தார் என்று நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரி எவ்விதமான கல்லை என் கணவர் மீது வீசினார் என்று புகாரில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எவ்வளவு தொலைவில் இருந்து வீசினார் என்ற விவரத்தை நான் புகாரில் என் கணவர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரியிடமிருந்து நிலத்தை வாங்க வேண்டும் என்ற நோக்கத்தோடு பொய் புகார் அளித்துள்ளோம் என்றால் சரியல்ல. என் கணவர் எதிரியை தாக்கியதால் எதிரி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்றால் சரியல்ல. எங்கள் உறவினர்கள் காவல்துறையில் இருப்பதாலும் அரசியல் செல்வாக்கு உள்ளதாலும் அதை பயன்படுத்தி எதிரி மீது பொய் புகார் அளித்துள்ளோம் என்றால் சரியல்ல. எதிரி சாதாரண விவசாய குடும்பத்தை சேர்ந்தவர் என்பதாலும் அவரை பழிவாங்கும் நோக்கத்தாலும் பொய் புகார் அளித்துள்ளோம் என்றால் சரியல்ல.

ஒப்பம்/—இரா.சுஷ்மிதா,
நீதித்துறை நடுவர் எண்.2
தருமபுரி.

**CC.No.193/2023 (JM.No.II, DHARMAPURI.)**

**29.05.2025**

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டது. (எதிரிகள் ஆஜர் )**

**PW3 : திரு.கந்தசாமி த/பெ. அருணாசலம்**

**முதல் விசாரணை**

நான் புறவடை கிராமத்தில் குடியிருந்து டிராக்டர் ஓட்டும் வேலை செய்து வருகிறேன். பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான். கடந்த நான்கு வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் சம்பவ இடமான காட்டுக்கொள்ளையில் காவல்துறையினர் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாலை சுமார் 4 மணிக்கு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்தனர். அந்த பார்வை மகஜரில் நான் இரண்டாவது கையெப்பம் இட்டேன். அன்றைய தினமே பகல் 11 மணிக்கு சம்பவ இடத்தில் இருந்து ஒரு கல் எடுக்கப்பட்டது. அதிலும் நான் சாட்சியாக இருந்து கையொப்பமிட்டேன். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆகவும் கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.3** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதல் விசாரணையில் கூறியது போல தான் போலீஸ் விசாரணையிலும் கூறினேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் நானும் என்னுடைய அண்ணனும் சம்பவத்தின் போது இல்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் எதிரி அவருடைய நிலத்தில் வடக்கு திசையிலிருந்து புல் அறுத்துக் கொண்டிருந்தார். எதிரி என்னுடைய அண்ணன் நிலத்தில் எந்த திசையில் இருந்து எந்த திசை நோக்கி வந்தார் என்றால் எனக்கு அதைப் பற்றி ஞாபகம் இல்லை. எதிரி என்னுடைய அண்ணனை அடித்த போது நான் கிழக்கு திசையில் இருந்து பார்த்தேன். எந்த வகையான கல்லை வைத்து என் அண்ணன் தாக்கப்பட்டார் என்று நான் பார்த்தேனா என்றால் பார்த்தேன் அதன் அளவு ஓரளவுக்கு ஞாபகம் உள்ளது. என் அண்ணன் கொடுத்த பொய் புகாரின் பேரில் நான் பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும் சரியல்ல. சம்பவ இடத்தை நான் தான் அடையாளம் காட்டினேன் என்றால் சரிதான். அவ்வாறு அடையாளம் காட்டியதாக நான் போலீஸசார் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். மேற்படி கல்லை நான் போலீசாரிடம் அடையாளம் காட்ட வில்லை என்றால் சரிதான். நான் வரைபடத்தில் முதலாவதாக கையெழுத்திட்டு உள்ளேன் என்றால் சரிதான். நான் போலீசார் விசாரணையில் மொத்தமாக இரண்டு கையொப்பமிட்டேன். நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் வரைபடம் மற்றும் பார்வைமகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் கையொப்பமிடவில்லை என்றால் சரியல்ல. என் அண்ணன் கொடுத்த பொய் புகாரின் பேரில் பொய் சாட்சி அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/−இரா.சுஷ்மிதா,
நீதித்துறை நடுவர் எண்.2
தருமபுரி.

CC.No.193/2023 (JM.No.II, DHARMAPURI.)

29.05.2025

**சாட்சிக்கு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டது. (எதிரிகள் ஆஜர் )**

**PW4 : திரு.ரத்தினவேல் த/பெ. அருணாசலம்**

**முதல் விசாரணை**

நான் புறவடை கிராமத்தில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். கடந்த நான்கு வருடங்களுக்கு முன்பு காவல் துறையினர் என்னை விசாரித்தனர். **பார்வை மகஜரில் உள்ள முதல் கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. **கைப்பற்றுதல் மகஜர் உள்ள முதல் கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் என்ன உள்ளதென்று எனக்கு தெரியாது. இவ்வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

**(அரசு தரப்பு சாட்சியை பிறழ் சாட்சியாக்கி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது)**

04.05.2021 பகல் 11 மணிக்கு வழக்கின் சம்பவ இடத்தை காவல்துறையினர் பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்ததாகவும் அன்றைய தினமே 12 மணிக்கு சம்பவ இடத்தில் இருந்து ஒரு கிலோ எடை கொண்ட கருங்கல் ஒன்று கைப்பற்றியதாகவும் அதில் சாட்சியாக இருந்து முதல் கையெழுத்திட்டு தற்சமயம் பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் என்ன எழுதியுள்ளது என்று தெரியாது என்று எதிரிக்காக பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரியல்ல நான் நேரடியாக பார்த்தேன். நான் சம்பவத்தை சுமார் 300 அடியில் இருந்து பார்த்தேன். மேற்படி தகவலை நான் போலீஸ் விசாரணையில் கூறினேன் என்றால் சரிதான். எதிரி வடக்கு திசையில் புல் அறுத்துக் கொண்டிருந்தார். நான் கிழக்கு திசையில் இருந்தேன். எதிரி கிழக்கு திசையில் இருந்து மேற்கு திசை நோக்கி கல்லை வீசினார். எதிரி கெட்டி கல்லை அ.சா.1 யை நோக்கி வீசினார். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் சுமார் நான்கு நபர்கள் இருந்தனர். மேற்படி கல் சுமார் இரண்டு கிலோ எடை இருக்கும். மேற்படி எதிரி கல்லை வீசியபோது அ.சா.1 –ற்கு இடது கை மோதிர விரல் உடைந்து ரத்தம் வந்தது. நான் என்னுடைய தம்பி கந்தசாமி என்னுடைய அண்ணி அம்பிகா ஆகியோர் சம்பவ இடத்தை போலீசாருக்கு அடையாளம் காட்டினோம். மேற்படி கல்லையும் அடையாளம் காட்டி அதற்கு சாட்சி கையெழுத்து இட்டேன். நான் சொல்வது போல ஒரு சம்பவமே நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரி அவருடைய நிலத்தில் புல் அறுத்துக் கொண்டிருந்தார் என்றாலும் என்னுடைய அண்ணன் தான் அத்துமீறி அவரது நிலத்தில் நுழைந்து எதிரியின் கையில் இருந்த அருவாளை ஆபாச வார்த்தைகளால் திட்டி பிடுங்கியதால் ஏற்பட்ட காயத்தையும்

தடுமாறி ஓடி சென்று விழுந்த காயத்தையும் மையப்படுத்தி பொய் புகார் அளித்து அதற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் அண்ணன் எதிரியை அடித்து அதனால் எதிரி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எனது அண்ணனை காயம் ஏற்பட்ட பிறகு நான், என்னுடைய அண்ணன், என்னுடைய சித்தி மகன் காமராஜ் மற்றும் என்னுடைய அண்ணி ஆகியோர் அரசு மருத்துவமனைக்கு இரு சக்கர வாகனத்தில் அழைத்து சென்றோம். என் சித்தி மகன் காமராஜ் என்பவர் போலீஸ் வேலை செய்கிறார். புகாரை என் அண்ணி தான் எழுதினார். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் என் அண்ணி அம்பிகா இல்லை என்றால் சரிதான். முன்னூறு அடி தூரத்தில் இருந்தார். எதிரியுடைய நிலத்தை என் அண்ணன் விலைக்கு வாங்க கேட்டார் என்றாலும் அதை எதிரி விலைக்கு கொடுக்க மறுத்துவிட்டார் என்றாலும் அதற்காக முன்விரதம் ஏற்பட்டு இவ்வழக்கில் பொய் புகார் அளித்து அதற்கு சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகாரில் சொல்வது போல ஒரு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரியை என் அண்ணன் தாக்கி அவர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார் என்றாலும் அதன் மேல் நடவடிக்கை எடுத்து விடுவார் என்று பயந்து போய் புகார் அளித்துள்ளோம் என்றால் சரியல்ல. வரைபடத்தில் நான் மூன்றாவது கையொப்பமிட்டேன். நான் சம்பவ இடத்தில் வைத்து இரண்டு கையொப்பமிட்டேன். நான் சொன்ன தேதியில் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் வைத்து எந்த கையொப்பமும் இடவில்லை என்றால் சரியல்ல.

ஒப்பம்/–இரா.சுஷ்மிதா,
நீதித்துறை நடுவர் எண்.2
தருமபுரி.